# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாற்று பரிகாரத் தீர்வு மைய வளாகம், தருமபுரி

## பத்திரிக்கைச் செய்தி

**அறிவிக்கை எண்: 01/2026** **தேதி:18.04.2026**

## தன்னார்வ சட்டப்பணியாளர்கள் சேர்க்கை அறிவிப்பு

**(NOTIFICATION OF PARA LEGAL VOLUNTEERS)**

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Bachpan Bachao Andolan VS Union of India and Others, என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படியும், தமிழ்நாடு அரசின் G.O.(Ms)No.130, தேதி: 12.03.2026 உத்தரவு படியும் மற்றும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் வழிகாட்டுதலின் படியும், தருமபுரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு காணாமல் போன குழந்தைகளை மீட்டெடுப்பது தொடர்பாக காவல் நிலையங்களில் பணியாற்ற சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers-P.L.V)" தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள்.

மேலும், தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கு கீழ்கண்ட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பதவியின் பெயர் | காலியிடங்கள் | மதிப்பூதியம் | கல்வி மற்றும் இதரத் தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers-PLV) | 30 | ரூ.1000/- (நாள் ஒன்றுக்கு) | குறைந்தபட்ச கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு (HSC) ஆகும்.<br><br>வயது வரம்பு 25 முதல் 65 வயது வரை இருக்க வேண்டும்.<br><br>பட்டதாரிகளுக்கும், சமூகப் பணி, உளவியல் அல்லது அது சார்ந்த பிற துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். |

**சட்டத் தன்னார்வலர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக, பின்வருவன அவர்களின் கடமைகளாகவும் பொறுப்புகளாகவும் அமையும்:**

- விசாரணையின் போது உதவுதல்
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்
- காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மீட்கப்பட்ட குழந்தைக்குப் பிந்தைய கால ஆதரவு அளித்தல்
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல்.

**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, தருமபுரி சட்ட தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்:**

1. மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.

2. மேற்படி பணியில் ,ணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும் நிரந்தர பணியென கருத ,யலாது.

3. மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை தருமபுரி நீதிமன்ற **https://dharmapuri.dcourts.gov.in/** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 30-04-2026 தேதி மாலை 05.45 மணிக்குள் பதிவு தபால் மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் நேரில் பெறப்படமாட்டாது.

4. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம், ADR அலுவலகம்,
தருமபுரி மாவட்டம் - 636705.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி 30-04-2026 மாலை 05.45 மணி அதற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் நேரில் பெறப்படமாட்டாது. தருமபுரி மாவட்டத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படாத விண்ணப்பங்கள் குறித்த தகவல்கள் மற்றும் நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விபரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் விவரமும் **https://dharmapuri.dcourts.gov.in/** என்ற தருமபுரி மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

THIRUMAGAL C
Digitally signed by THIRUMAGAL C
Date: 2026.04.18 14:53:05 +0530

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு,
தருமபுரி.

நகல்.

1. All the Judicial Officers in this District (To Publish in the Notice Board)
2. The Public Relation Officer (with a request to give wide publicity of the above notification/this NEWS in Tamil News Papers)
3. System Analyst, District Court to publish in District Court Website
4. Notice board of District Legal Services Authority, Dharmapuri

# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, தருமபுரி மாவட்டம்
# சட்ட தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்ப படிவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | | விண்ணப்பதாரர் புகைப்படம் |
| 2 | தந்தை/ கணவர் பெயர் | : | | |
| 3 | பாலினம் | : | | |
| 4 | பிறந்த தேதி மற்றம் வயது (சான்றிதழை இணைக்கவும்) | : | | |
| 5 | கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்) | : | | |
| 6 | சாதி | : | | |
| 7 | இனம் | : | | |
| 8 | மதம் | : | | |
| 9 | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | | |
| 10 | இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | | |
| 11 | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | | |
| 12 | தாங்கள் எந்தப் பகுதியில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (குறிப்பிடவும்) | : | தருமபுரி, பாலக்கோடு, காரிமங்கலம், அரூர், பென்னாகரம், பாப்பிரெட்டிபட்டி | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்

சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த வெகுமானம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்